செ.வெ.எண்: 43 நாள்: 19.01.2017

**புதுக்கோட்டை நகராட்சியில் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பூங்காவினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.**

புதுக்கோட்டை நகராட்சி, பூங்கா நகரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் இன்று (19.01.2017) திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் புதிதாக கட்டப்பட்ட பூங்காவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து கூறியதாவது:

தமிழகஅரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை நகராட்சி, பூங்காநகரில் முன்மாதிரி நகரம் (Smart City) திட்டத்தின் மூலம் அம்ரூட் நிதியின் கீழ் ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் அழகு நீரூற்று, நடைபாதை தளம், சிறுவர் விளையாடும் இடம், விளையாட்டு உபகரணங்கள், அழகுச்செடிகள், அலங்கார வளைவு, பாதுகாப்பு சுற்றுச்சுவர், ஆழ்துளை கிணறுடன் கூடிய குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தங்களது ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் செலவழிக்கலாம். மேலும் காலை, மாலை நடைபயிற்சி மேற்கொள்பவர்களுக்கு இது மிகுந்த பயனுள்ளதாக அமையும். எனவே அனைத்து பொது மக்களும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.வி.சி.ராமையா, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜுவாசுப்பிரமணியன், முன்னாள் நகர்மன்றதுணைத்தலைவர் திரு.சேட், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.பாஸ்கர், திருமதி.மலர்விழிமுத்து, திரு.ராமதாஸ், தொழிலதிபர் திரு.ஜெயக்குமார், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**